1972 ஆகஸ்ட் 11]

எல்லாப் பள்ளிக்கூடங்களும் இந்தப் படங்களைக் காட்டுகின்ற அளவுக்குத் திரைப் படக் கருவிகள் வாங்கக்கூடிய வசதிகளைப் பெற்றில்லை. வசதி இருக்கின்ற பள்ளிகளில் இது நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. ஏ. எம். இராஜா : டெல்லி யூனிவர்சிடியிலிருந்து ரேடியோ மூலம் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இரவு பத்து மணிக்கு மேல் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. நம்முடைய தமிழ்நாட்டிலும் மதுரை யூனிவர்சிடி மூலம் தனியாகவே பி.ஏ., எம்.ஏ; தேர்வுகளை எழுதலாம் என்று அனுமதிக்கப் பட்ட நிலையில் மதுரைப் பல்கலைக் கழகத்தின் மூலம் ரேடியோவின் வாயிலாக காலை ஆறு மணிக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வழி வகைகளைச் செய்ய அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மதுரைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் மூலம் பாடம் சொல்லிக் கொடுக்கும் முறை சென்ற ஆண்டில் புகுத்தப் பட்டது. அந்தப் பல்கலைக் கழகம் வானொலி மூலமாகப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றால் மதுரையில் வானொலிக் கூடம் அமைய வேண்டும். தற்போது சென்னையிலும், திருச்சியிலும்தான் வானொலிக் கூடங்கள் இருக்கின்றன. அதற்கான காரியங்கள் எந்த அளவுக்கு சாத்தியப்படும் என்று ஆராய்ந்து பல்கலைக் கழகத்தினர் முயற்சிகளை எடுப்பார்களானால் அதற்குத் துணையாக இருக்க அரசு முயலும்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள்

* 58 வினா—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் வானொலிப் பெட்டி வைத்து அதன் மூலம் மாணவ, மாணவிகளுக்குப் பொது அறிவு வளரச் செய்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தமிழகத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளும் தகுதி அளிக்கப் பட்டுள்ள, வானொலிப் பெட்டியினை நிர்ணயிக்கப்பட்ட நிலையினில் வாங்கிக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. பள்ளி மின்வசதியற்றிருந்தால் கூட மின்கல வானொலிப் பெட்டிகளைப் பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.